श्रीमते लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ।
श्रीमते श्रीवण्शठकोपश्रीवेदान्तदेशिकयतीन्द्रमहादेशिकाय नमः ॥

आविष्णोरभिवन्द्यादावाचार्याणां परम्पराम् । वेदाचार्यांश्च मे तातान् पराङ्कुशसदाह्वयान् ॥

वात्स्यरामानुजार्येण तैत्तिरीयमधीयता । व्याख्यानं क्रियतेऽथर्ववेदीयाऽमृतबिन्दुनः ॥

द्राविड्या वेदमौळेर्हि प्रीतये नृहरेर्गुरोः । रङ्गनाथयतीन्द्राणां षष्टिपूर्तिमहे शुभे ॥

अहोबिलमठास्थानधूर्वहाणां निदेशतः । श्रीनृसिंहपदद्वन्द्वसंश्रयाणां मुदे भवेत् ॥

॥ अमृतबिन्दूपनिषद् ॥

அதர்வ வேதத்தைச் சேர்ந்த அம்ருதபிந்து உபநிஷத்

(இது க்ருஷ்ணயஜுர்வேதத்தைச் சேர்ந்ததாகச் சில புத்தகங்களில் காணப்படுகிறது.)

உபநிஷத்துகளில் 'யோக உபநிஷத்துகள்' எனச் சிலவற்றை வழங்குவர். மனதை அடக்கி த்யானத்துக்கு ஏற்றதாக அமைத்துக் கொள்வதைப் பற்றி இவைகளில் கூறப்படும். இதுவே எட்டு அங்கங்களுடன் கூடிய பக்தியோகமான மோக்ஷோபாயம். அவற்றில் சேர்ந்தது இந்த 'அம்ருதபிந்து உபநிஷத்'. 'ப்ரஹ்மபிந்து உபநிஷத்' எனவும் சில கோஶங்களில் இதன் பெயர் காணப்படுகிறது. இதில் 22 மந்த்ரங்கள் உள்ளன.

விஷயச்சுருக்கம்

மனது தான் பந்தம் மற்றும் மோக்ஷத்துக்கு காரணம்	2-1 மந்த்ரங்கள்
மனதை அடக்குவது தான் மோக்ஷத்துக்கு வழி	5-3
த்யானத்தால் ப்ரஹ்மத்தை அடையலாம்	6
த்யானத்தில் நிலைகளின் வரிசை	10-7
ஜீவாத்மஸ்வரூபம் ஒரே வகையானது	12-11
ஆத்மாவின் நித்யத்வம், கர்மஸம்பந்தம்	14-13
பரமாத்மா தான் மோக்ஷோபாயம்	15
முறையாக த்யானத்தை ஏற்றல்	18-16
பரமாத்மாவின் அந்தர்யாமித்வம், ஸித்தோபாயத்வம்	20-19
ப்ரஹ்மஸாக்ஷாத்காரம், மோக்ஷப்ராப்தி	22-21

மனதை அடக்க முற்படுவதற்கு முன் அதன் வகைகளைப் பற்றி அறியவேண்டுவதால், முந்துற முன்னம் மனது இருவகைத்து எனக் கூறப்படுகிறது.

मनो हि द्विविधं प्रोक्तं शुद्धं चाशुद्धमेव च । अशुद्धं कामसंकल्पं शुद्धं कामविवर्जितम् ॥ १ ॥

மனதானது ஶுத்தம் மற்றும் அஶுத்தம் என இருவகைப்படும். அஶுத்தமாவது, சிற்றின்பங்களில் ஆசையுள்ள எண்ணங்களுடன் கூடியது. ஶுத்தமாவதோ தனக்கெனத் தனித்த ஆசைகளற்று, பரம் பொருளை அறிய உதவுவதென அறியவேண்டும்.

ஸ்ரீமத்ராமாயணத்தில் வால்மீகி பகவான் தன் சீடரான பரத்வாஜ முனிவருடன் தமஸாநதிக்கு மாத்யாஹ்னிக அனுஷ்டானத்துக்காகச் செல்லும்போது, அந்நதியின் நீரைப் பார்த்துச் சொன்னதாவது - 'अकर्दममिदं तीर्थं भरद्वाज निशामय । रमणीयं प्रसन्नाम्बु सन्मनुष्यमनो यथा ॥' (வா.ரா. 1.2.5) *ஓ பரத்வாஜனே!, கலக்கமற்ற இந்நீரைப் பார். மனங்கவரும் மிகத் தெளிந்த இந்நீரானது, ப்ரஹ்ம-ஜ்ஞானமுள்ளவரின் மனதைப் போன்று உள்ளது.*

பரம்பொருளைப் பற்றி அறியத் தூய்மையான மனது தேவை எனினும், அதற்கும் வரம்பு உளதென்பதை, அது எதை விரும்புகிறது, எதை நினைக்கிறது என்பதை இட்டு அறியலாம். ஶ்ருதிகளில், 'यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह । आनन्दं ब्रह्मणो विद्वान् ...' (तै.आ. 5.14), 'न तत्र चक्षुर्गच्छति न वाग्गच्छति नो मनः' (के.उ. 1.3), *என, ப்ரஹ்மம் மற்றும் அதன் ஆநந்தம் எல்லையற்றதால் மனதுக்கு எட்டாதது என்று கூறியிருந்தாலும்,* 'हृदा मनीषा मनसाऽभिक्लृप्तो य एनं विदुरमृतास्ते भवन्ति' (तै.आ. 6.1), 'मनसा तु विशुद्धेन' (वेदार्थसंग्रहे) *எனவும்,* 'रुक्माभं स्वप्नधीगम्यं विद्यात्तु पुरुषं परम् ।' (मनुस्मृति 12.122) *எனவும், 'நனவில் சென்று ஆர்க்கும் நண்ணற்கரியானை நான் அடியேன் நறையூர் நின்ற நம்பியை கனவில் கண்டேன் இன்று கண்டமையால் என் கண்ணிணைகள் களிப்பக் களித்தேனே'* (*பெரிய திருமொழி* 7.3.1) *எனவும் ஶுத்தமான மனதால் த்யானிக்கத்தக்கது ப்ரஹ்மம் என ப்ரமாணங்கள் கூறுகின்றன. அதாவது, ஓரளவுக்குக் கோடி காட்டலாம் என்று பொருள். அதுவும் முடியாதெனில் ப்ரஹ்மத்தை த்யானிக்கச் சொல்லும் விதிகள் (கட்டளைகள்) எல்லாம் நிறைவேற்ற முடியாததால், பொருளற்றனவாகும். இதனால் தான் 'மடநெஞ்சம்'* (*திருவாய்மொழி* 1.7.5) *என்றும் 'மனனகமலம்'* (*திருவாய்மொழி* 1.1.2) *என்றும் ஒத்துழையாத, அஶுத்தமான, மனதைச் சொன்ன ஆழ்வாரே, 'நெஞ்சமே நல்லை நல்லை உன்னைப் பெற்றால் என் செய்யோம் இனி என்ன குறைவினம் மைந்தனை மலராள் மணவாளனைத் துஞ்சும் போதும் விடாது தொடர் கண்டாய்'* (*திருவாய்மொழி* 1.7.6) *என்று ஶுத்தமான, ஒத்துழைக்கும், மனதைப் பற்றிக் கொண்டாடுகிறார்.* (1).

मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः । बन्धाय विषयासक्तं मुक्तं निर्विषयं स्मृतम् ॥ २ ॥

மனிதர்களுக்கு மனது தான் கட்டுப்படுதல் மற்றும் விடுபடுதலுக்குக் காரணமாகும். புலன்களால் அநுபவிக்கும் பொருட்களில் பற்றுற்றபோது கட்டுப்பட்டதாகும். அவைகளுடன் பற்றற்ற நிலையில் விடுபடும். 'அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்' (1.2.5) *என்றார் ஆழ்வாரும்.* 'कर्मायत्तं फलं पुंसां बुद्धिः कर्मानुसारिणी । तथापि सुधियः कार्यं सुविचार्यैव कुर्वते ॥' (चाणक्यनीतिदर्पणः 13.18), *நாம் அடையும் பலன்கள் நம் கர்மாவை அண்டியுள்ளன. புத்தி, அதாவது அறிவு, கர்மாவைத் தொடர்கிறது. ஆயினும், அறிவாளிகள் எச்செயலையும் நன்கு ஆராய்ந்தே செய்கின்றனர், என்கிறார் சாணக்யர்.* 'मनसो वशे सर्वमिदं बभूव । नान्यस्य मनो वशमन्वियाय । भीष्मो हि देवः सहसः सहीयान् । स नो जुषाण उप यज्ञमागात्। आकूतीनामधिपतिं चेतसां च । सङ्कल्पजूतिं देवं विपश्चिम् । मनोराजानमिह वर्धयन्तः । उपहवेऽस्य सुमतौ स्याम ।' (तै.का. 3.3) *என்று 'மனதின் வஶத்தில் தான் இங்குள்ளார் எல்லாரும் இருக்கின்றனர். மனது வேறு யாருடைய வஶத்திலும் இருந்து பின்தொடரவில்லை. மனதுக்கு அதிபதியான பலமுள்ள தேவன் எம்பெருமானே நம்மை உவந்து நம்முடைய அழைப்பை ஏற்கட்டும். மனதுக்கும் எண்ணங்களுக்கும் அதிபதியான, எல்லாம் அறிந்த, தன் ஸங்கல்பத்தால் மனதை ஆள்பவனான, பகவானை நாம் போற்றி அவனுடைய நல்லருளுக்கு ஆளாவோமாக' என்கிறது மறை.*

மனது எம்பெருமானாலேயே ஏவப்படுகிறதென, ஆழ்வார்கள், 'என் நலனும் என் நிறைவும் என் சிந்தையும் என் வளையும் கொண்டென்னை ஆளும் கொண்டு' (*திருநெடு.* 25), *'வல்லாளன் பின் போன நெஞ்சம் வருமளவும்'* (*பெரியதிரு.* 9.4.5), *'சிந்தை தன்னில் நீங்காதிருந்த திருவே'* (*பெரிய. திரு.* 4.8.2), *'நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன்'* (*பெரியா.திரு.* 5.4.8), *'மாற்பால் மனம் சுழிப்ப மங்கையர் தோள் கை விட்டு'* (3*திருவ.* 14), *எனவும், மறைகளில், மனது எப்போதும் ஶூன்யமாக*

இராது. அதன் விஷயம் அல்லது பற்றுதல், உயர்ந்ததோ தாழ்ந்ததோ ஆகியிருந்து, அதைப் பொறுத்து, 'परमात्मनि यो रक्तो विरक्तोऽपरमात्मनि' (नारदपरिव्राजकोपनिषत् 3.18), 'उद्धरेदात्मनाऽऽत्मानं नात्मानमवसादयेत् । आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मनः ॥' (भ.गी. 6.5) என்றபடி கட்டோ விடுதலையோ ஏற்படுகிறது, எனப்பட்டுள்ளது. 'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்' என்று பழமொழியும் உள்ளது. 2.

यतो निर्विषयस्यास्य मनसो मुक्तिरिष्यते । अतो निर्विषयं नित्यं मनः कार्यं मुमुक्षुणा ॥ ३ ॥

இந்த மனது விஷயங்களுடன் (பொருட்களுடன்) தொடர்பு கொள்ளாத போது, அதாவது, விஷயங்களற்று இருக்கும்போது, விடுதலை ஏற்படும் என்னப்பட்டுள்ளதால், விடுதலையை (மோக்ஷத்தை) விரும்புபவன் மனதை எப்பொழுதும் விஷயங்களின் சார்பின்றி இருக்குமாறு செய்ய வேண்டும். இது நாமாகவே செய்து கொள்ள முடியாதாயினும், மனது 'स्वबलेन हन्त मनसो निवर्तनं बिसतन्तुनैव सुरदन्तियन्त्रणम्' (संकल्पसूर्योदये), 'असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलं' (भ.गी. 6.35), 'प्रमाथि बलवद्दृढं, तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम्' (भ.गी. 6.34) என்றபடி வலிய யானையைப் போன்று, காற்றைப் போன்று அடக்க முடியாதது, திமிறக்கூடியது, சஞ்சலமானது, எனினும், 'योगश्चित्तवृत्तिनिरोधः' (पा.यो. सू. 1.1), 'यत्र योगेश्वरः कृष्णः' (भ.गी. 18.79), 'अभ्यासेन च कौन्तेय वैराग्येण च गृह्यते' (भ.गी. 6.35), என்றெல்லாம் கூறியுள்ளபடி, மனதை அடக்க, வைராக்யம் அல்லது பற்றற்றிருத்தல், மற்றும் விடாமுயற்சி இவற்றால் அதை அடக்க முயலவேண்டும்.

ஒருமுறை அடங்கினால் பிறகு அவ்வாறே இருக்கும் என்பதில்லை. நீரின் மீதுள்ள பாசியை அகற்றி நீரைப் பருக வேண்டுமாயின், மீண்டும் மீண்டும் பாசியை அகற்றலைப் போன்றதாம் மனதை முயற்சியால் அடக்கல். யோகம் என்ற ஶாஸ்த்ரம் மனதின் போக்கை அடக்க எட்டு வித வழிமுறைகளை அறிவிக்கிறது. ஆதலால், எப்பொழுதும் மனதின் போக்கைக் கட்டுப் படுத்திக் கொண்டிருப்பதால் மட்டுமே ஆத்மாவின் விடுதலையை அடைய முடியும். இதில் எம்பெருமானின் அருளை எதிர்பார்த்தல் மிக முக்கியமானது. கீதையில் 'யோகேஶ்வரன்' (18.79) என க்ருஷ்ணனைக் கூறியுள்ளது. 3.

निरस्तविषयासङ्गं संनिरुद्धं मनो हृदि । यदा यात्यात्मनो भावं तदा तत्परमं पदम् ॥ ४ ॥

மனதானது ஐம்புலன்களின் விஷயங்களுடன் பற்றற்று இதயத்தில் நன்கு கட்டப்படும் பொழுது, ஆத்மாவின் இயல்பான தன்மையை அடைவதால், அப்பொழுது ஆத்மா உயர்ந்த நிலையை அல்லது இடத்தை அடையத்தக்கதாகிறது. 'अन्नात्प्राणा भवन्ति भूतानां प्राणैर्मनो मनसश्च विज्ञानं विज्ञानादानन्दो ब्रह्मयोनिः' (तै.आ. 6.63) என இந்த்ரியங்களில் ஒன்றும் ப்ரதானமானதுமான மநஸ், ஸாத்த்விக ஆஹாரத்திலிருந்து தொடங்கி, நல்லறிவின் வாயிலாக, பேரின்பமாகிய ஆத்மாவின் இயல்பான நிலைக்குச் செல்ல ஒத்தாசை செய்யக் கூடியது. நிலையான, ஆத்மாவின் மேன்மையில் ஈடுபடும் போது ஆத்மாவுக்கு மிக உதவியாக இருப்பதால் மனது, பரமபதத்துக்குத் துணை ஆகிறது.

நின்றவாநில்லா நெஞ்சாதலால், யாரும் எப்பொழுதும் மனதை முழுதாக அடக்கி விட்டதாகச் சொல்ல முடியாது. காற்று இல்லாத இடத்தில் வைக்கப்பட்ட விளக்கைப் போன்று, குறைதல் நிறைதல் இன்றி, நிஶ்சலமாக, ஒரே நிலையில் இருத்தல், ஸந்நிரோதம் ஆகும். ஆத்மா கர்மாவுக்கு வஶமாகாதபோது விளக்கைப் போன்று ப்ரகாஶமான ஒளியுடன் கூடியது. ஆத்மாவின் பாவம் - ஸ்வபாவம், இயல்பு, ஒளி.

அத்வைதவ்யாக்யானத்தில் கௌடபாதகாரிகையில் ('उत्सेक उदधेर्यद्वत् कुशाग्रेणैकबिन्दुना । मनसो निग्रहस्तद्वत् भवेदपरिखेदतः ॥') என, ஒரு டிட்டிபமென்ற பறவை (குருவி போன்றது), தன் அலகு நுனியால் ஸமுத்ரஜலத்தை வற்ற அடிக்க நினைத்து, விடாமுயற்சியால் இறுதியில் பகவதனுக்ரஹத்தால்

வெற்றி பெற்றது, எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ளது. 4.

तावदेव निरोद्धव्यं यावद्धृदि गतं क्षयम् । एतज्ज्ञानं च ध्यानं च शेषो न्यायश्च विस्तरः ॥ ५ ॥

'மாசற்றார் மனத்துளானை' (திருமாலை 22) என்னும்படி 'மனமாசு தீர்ந்தால் அருவினைகள் சாரா' (1திருவ 43) என்பதால், மனதை எவ்வளவு தடுத்து இதயத்தில் நிறுத்தினால் அதன் வாஸனையால் ஏற்பட்ட புலன்களின் இன்பங்களில் பற்றுதல் முழுவதும் தேய்ந்து அல்லது கரைந்து விடுமோ, அவ்வளவு மட்டுமே மனதை அடக்க வேண்டும். அப்போது, இதயம் ஆத்மாவுடன் ஒத்து மகிழ்ச்சியாய் இருக்க உதவும்.

ஆத்மா தன் திடமான ஸங்கல்பத்தால் மனதை தனக்கு வேண்டிய வழியில் செலுத்தலாம். இது தான் உயர்ந்த அறிவும், த்யானமும் ஆகும். இதைத் தவிர மற்றவை எல்லாம் வெறும் தர்க்கமும், அதாவது, காரணகார்ய சிந்தனையும், விரிவும் ஆகும்.

இந்த மந்த்ரத்தின் இரண்டாம் பாதியில் பல பாடபேதங்கள் காணப்படுகின்றன. இதே உயர்ந்த த்யானம், த்யானிக்கத் தக்கது, அறிவு, இதைத்தவிர மற்றவை எல்லாம் வீண் விரிவு, ஏட்டறிவு எனவாம். அதாவது, இதைச் செயலால் தான் ஸாதிக்கலாமே தவிர, சிந்திப்பதாலோ, பேசுவதாலோ, விவாதிப்பதாலோ அல்ல என்றபடி. ஆண்டாளும், 'தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' (திருப்பாவை 5) என்று கூறியுள்ளாள். 5.

नैव चिन्त्यं न चाचिन्त्यं न चिन्त्यं चिन्त्यमेव च । पक्षपातविनिर्मुक्तं ब्रह्म संपद्यते तदा ॥ ६ ॥

ப்ரஹ்மத்தை அடைய வேண்டின், அதனைப் பற்றி நினைக்க வேண்டும். அதுவோ முழுதும் நினைவுக்கு எட்டாதது. ஆனால் நினைக்காமல் இருக்கலாமா என்னில், நினைக்காமல் அடைய முடியாது. चिन्तयितुं शक्यम् சிந்திக்க முடியுமது, चिन्तयितुं योग्यम् சிந்திக்கத் தக்கது, எனும் இரு வகைகளில் - கூடுதல், கூடாமையை இட்டு - चिन्त्यम्, अचिन्त्यम्, न चिन्त्यम्, चिन्त्यम् என்ற நான்கு சொற்கள் வழங்கப்பட்டுள்ளன.

நினைக்கத் தக்கதைக், கூடிய வரை, நினைத்தல் எனவாம். முழுதுமாகச் செய்யாததை இட்டு நினைக்கவில்லையாகவுமாம். ஸ்ரீமத்பாகவதத்தில் 'संचिन्तयेद्भगवतश्चरणारविन्दं .... ध्यायेच्चिरं भगवतः चरणारविन्दम्' (श्रीमद्भागवतं 3.28.21,22) என 'த்யானிப்பவரின் மலையைப் போன்ற வல்வினைகளையும் இந்த த்யானம் வஜ்ராயுதத்தைப் போல் தகர்த்திடும்' என்று கூறியுள்ளது நினைக்கத்தக்கது. எதிலும் சார்பற்ற ப்ரஹ்மமானது, நினைக்கத்தக்கதென அறிந்து, நினைத்து, நினைக்கக் கூடுமென்று அதன் இடைவிடாத நினைவை அடைதலே ப்ரஹ்மத்தை அடைவிக்கும். 'பெறற்கரிய நின்ன பாதபத்தியான பாசனம் பெறற்கரிய மாயனே எனக்கு நல்க வேண்டுமே' என்றும், 'நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே' (திருச்சந்த. 100,101) என்றும் திருமழிசை ஆழ்வார் அருளியபடி எம்பெருமான் 'சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திரு' (பெரியதிரு. 4.8.2) வாதலும், 'வேறொருவரோடு என்மனம் பற்றாது' (பெரியாதிரு 5.1.2) என்னும் நிலையே அதாம். பகவானுடன் ஒன்றியிருத்தல் என்றபடி. 6.

स्वरेण संधयेद्योगमस्वरं भावयेत्परम् । अस्वरेणानुभावेन भावो नाभाव इष्यते ॥ ७ ॥

ஸ்வரத்துடன் அதாவது, ஒலியுடன் த்யானத்தைச் சேர்க்க வேண்டும். பின்னர், ஸ்வரமின்றி பரப்ரஹ்மத்தை த்யானிக்க வேண்டும். ப்ரணவமாகிற ஸ்வரமின்றி த்யானித்த போதிலும் அந்த ஓங்காரம் இல்லாமல் போகாது. ஆனால், நாம் அதைக் கருதாதிருக்கலாம். அகார, உகார, மகார, நாதங்களெனவும், உதாத்தம் முதலிய ஸ்வரங்களும், ப்ரஹ்மத்யானத்தில் பயன்படும் ப்ரணவத்தில் பகுதிகளாக இருப்பதாக அறிந்து, அவற்றின் பொருட்களையும் நன்கு சிந்தித்துப், பின்னர் அவற்றால் சொலப்படும் பொருளான

எம்பெருமானில் லயித்தல் யோகம் அல்லது த்யானம் எனப்படுகிறது. அதின் அடைவான நிலைகளை இங்கு கூறுகிறது. 7.

तदेव निष्कलं ब्रह्म निर्विकल्पं निरञ्जनम् । तद्ब्रह्माहमिति ज्ञात्वा ब्रह्म संपद्यते ध्रुवम् ॥ ८ ॥

ப்ரஹ்மத்தின் த்யானத்தால் ஸமாதியில் லயிக்கும்போது ப்ரஹ்மத்தில் எந்த அம்ஸங்களும், அதாவது, பகுதிகளும், பலவகைப்பட்ட வேற்றுமைகளும், பற்றுதலும், பூச்சுக்களும் இன்றி, அதன் இருப்பு மட்டுமே நினைக்கப்படுவதால், த்யானிப்பவன் அந்த ப்ரஹ்மம் நானே என்று திந்து கட்டாயம் ப்ரஹ்மத்தின் நிலையை அடைந்து விடுகிறான். ஆழ்வார் 'கடல்ஞாலம் செய்தேனும் யானேயென்னும்' (திருவாய். 5.6) பதிகத்தில் பாடியபடியும், ஸூத்ரகாரர் 'शास्त्रदृष्ट्या तूपदेशो वामदेववत्' (ब्र.सू. 1.1.31) என வாமதேவர் முதலிய மஹர்ஷிகள் யோகத்தில் கண்டதாகக் கூறியபடியும், ப்ரஹ்லாதாழ்வான் 'सर्वगत्वादनन्तस्य स एवाहमवस्थितः' (वि.पु. 1.19.85) என, எம்பெருமான் எங்கும் நிறைந்திருப்பதால் நான் அவனே எனவும் 'अवस्थितेरिति काशकृत्स्नः' (ब्र.सू. 1.4.22) என்று வேதாந்தத்தில் நிஶ்சயிக்கப்பட்டிருப்பதால் 'तत्स्थत्वात् काशकृत्स्नः परविषयतया जीवशब्दं जगाद' (श्लो. 142) என ஸ்வாமி தேஶிகன் ஸாராவளியில் 'अहं ब्रह्मास्मि' முதலியவற்றால் ஜீவாத்மா தன்னைப் பரமாத்மாவாக அறிதல் எப்படிப்பட்டது என்பதைக் காட்டியுள்ளார். 8.

निर्विकल्पमनन्तं च हेतुदृष्टान्तवर्जितम् । अप्रमेयमनादिं च यज्ज्ञात्वा मुच्यते बुधः ॥ ९ ॥

ப்ரஹ்மம் விகல்பங்கள் அற்றது. அளவில்லாதது. காரணமும் உதாரணமும் இல்லாதது. முழுவதாக அறியமுடியாதது, தோற்றம் அல்லது தொடக்கம் அற்றது. அதை நன்கு அறிவதால் வித்வான் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலையை அடைகிறான்.

'ब्रह्मन् ह विश्वा भूतानि । नावीव अन्तः समाहिता ।' (तै.ब्रा. 2.8.8.10) என்று, ப்ரஹ்மத்தில் சேதன, அசேதனரூபமான உலகம் முழுவதும், ஒரு ஓடத்தில் போல், உள்ளே அடங்கி யிருப்பதால், அதில் வேற்றுமைகள், வேறுபாடுகள், பன்மைகள், முதலியன இல்லை.

'ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற நன்றெழில் நாரணன்' (திருவாய். 1.3.7) என்றார் ஆழ்வாரும். இடம், காலம் மற்றும் பொருட்களால் அளவிட முடியாதது 'அனந்தம்' எனப்படும். இது ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை அறிவிக்கும் இயல்பாகும். 'ब्रह्म स्वयम्भु' - ஸ்வயம்பு அல்லது தான்தோன்றி ஆதலால் ப்ரஹ்மத்துக்கு ஒரு காரணம் இல்லை. அது தானே தன்னைப் பலவாக அமைத்துக் கொள்வதால் அதை 'ஸுக்ருதம்' என்கிறது தைத்திரீயம் 'तदात्मानँ स्वयमकुरुत । तस्मात् तथ्सुकृतमुच्यत इति ।' (तै.उ. 1.14). 'இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே' (திருவாய். 1.1.2), 'ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா' (திருவாய் 2.3.2), என ஆழ்வாரும், 'न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते' (श्वे.उ. 6.8), 'तेनाऽर्हति ब्रह्मणा स्पर्धितुं कः' (तै.ब्रा. 2.4.7.10) என மறைகளும், அதனுக்கு நிகரும் யாரும் இலர் மற்றும் அதனுடன் யாரும் போட்டியிட முடியாதெனக் கூறுதலால், 'தானே தனக்குவமன்' (3திருவ. 38) என்றும், 'அருளாளர் தாமெனினும் தமக்கொவ்வாரே' (மெய்விரத. 22) எனவும், ஆழ்வார், ஆசார்யர்கள் கொண்டாடுகின்றனர்.

தானே தனக்கு ஒத்திராமை மிகவும் ஸ்வாரஸ்யமாக ஸ்வாமி தேஶிகனால் வரதராஜ பஞ்சாஶத்தில் 'तुरग-विहगराज-स्यन्दनान्दोलिकादिषु अधिकमधिकमन्याम् आत्मशोभां दधानम्' (श्लो. 48) என்று விளக்கப் பட்டுள்ளது. 'अप्रमेयं हि तत्तेजो यस्य सा जनकात्मजा' (वा.रा. 3.35.18) என அளவிடமுடியாத பெருமை உடைத்து, அறிவுக்கும் புலன்களுக்கும் முழுமையாக எட்டாதது அப்ரமேயம். 'தோற்றக்கேடவையில்லவன்' (திருவாய் 3.6.6) என ஆழ்வாரும், 'सदेव सोम्येदमग्र आसीत्' (छा.उ. 6.2.1), 'तस्माद्धान्यन्न परः किञ्चनास' (तै.ब्रा. 2.8.9.4), 'पूर्वमेवाहमिहासमिति' (तै.आ. 1.23.4), 'यः

सदाऽस्तीति केवलम्' (वि.पु. 1.2.11), 'अनादिमत्परं ब्रह्म' (भ.गी. 13.13), என ஶ்ருதி, ஸ்ம்ருதிகளும் ப்ரஹ்மத்துக்கு தொடக்கம் இல்லை எனத் தெரிவிக்கின்றன. 'तमेवं विद्वानमृत इह भवति । नान्यः पन्था अयनाय विद्यते' (तै.आ. 3.12.7), 'ज्ञात्वा देवं मुच्यते सर्वपाशैः' (श्वे.उ. 1.8) என, அந்த ப்ரஹ்மத்தை அறிந்து உபாஸிப்பதால் தான் விடுதலை ஏற்படும், வேறு வழியில்லை என்று தேறலாம். 'வந்துனதடியேன் மனம் புகுந்தாய் புகுந்ததற்பின் வணங்கும் என் சிந்தனைக்கினியாய்' (பெரியதிரு. 3.5.1) என பகவான் பக்தர்களை அனுக்ரஹிக்க உட்புகுகிறான். 9.

न निरोधो न चोत्पत्तिर्न बद्धो न च साधकः । न मुमुक्षुर्न वै मुक्त इत्येषा परमार्थता ॥ १० ॥

ஆத்மஸ்வரூபத்துக்கு அழிவோ, தடையோ, துவக்கமோ, கட்டோ, விடுதலையோ, விடுபட விருப்பமோ, விடுபட்டவனோ இந்த எவ்வித மாறுதல்களும் இல்லை என்பதே உண்மை நிலையாம். பரமார்த்தத்வமாவது, ஸ்வரூபத்தின் உண்மை நிலை.

அதாவது, பகவத்ஸ்வரூபத்தை உணர்ந்து அனுபவிக்கும் ஆத்மாவுக்கு, அதற்கு முந்திய மனது முதலிய புலன்கள், அவற்றை அடக்குதல், அவை அழிதல், ஸாதனத்தைத் துவங்குதல், கட்டுண்டிருத்தல், ஸாதகனாக உபாஸநத்தைச் செய்தல், விடுதலையை வேண்டுதல், விடுபட்டது, முதலிய நிலைகளெல்லாம் என்றுமே இருந்திராததைப் போல் தோன்றும். 'अन्यत् किञ्चित् कर्तुं द्रष्टुं स्मर्तुम् अशक्तः पुनरपि शेषभावमेव याचमानः....' (वैकु.गद्यं) என்று பாஷ்யகாரரும், 'प्राचीनदुःखमपि मे सुखयन्निव त्वत्पादारविन्दपरिचाररसप्रवाहः' (वरद.पञ्चा. 41) என்று ஸ்வாமி தேஶிகனும், 'अहमन्नमहमन्नमहमन्नम्, ... अहविश्वँ भुवनमभ्यभवाम्' (तै.आ. 5.42), 'नोपजनं स्मरन्निदं शरीरम्' (छा.उ. 8.12.3), என்றெல்லாம் மறைகளிலும் கூறியபடி, பழையதெல்லாம் ஒட்டு மொத்தமாக மறந்து அல்லது மறைந்து போனது போலாவதால், இவை எதுவுமே இல்லை என்பதே விடுதலைக்குப் பின் எக்காலத்துக்கும் உண்மையாம்.

கடந்த காலத்தைக் காட்டிலும் எதிர்காலம் தான் பலமடங்கு பெரியது - 'भविष्यद्धि भूयो भूतात्' (तै.सं. 5.1.9.2) என வேதம் கூறுவதால் தான் மோக்ஷம் அல்லது வீடு எப்பொழுதும் உயர்ந்த பேறு, அதாவது, புருஷார்த்தமாகிறது.

அத்வைதத்தில் போல் ஜீவாத்மாவே இல்லை, மோக்ஷத்தில் ப்ரஹ்மம் மட்டுமே உள்ளது எனக் கூறுதல் முன்கூறிய பல ப்ரபலமான ப்ரமாணங்களுக்கு எதிர்த்தட்டாக இருப்பதால் சரியன்று. தவிர, இவ்வளவு நிலைகளை விவரிக்கவும் தேவை இல்லை. 10.

एक एवात्मा मन्तव्यो जाग्रत्स्वप्नसुषुप्तिषु । स्थानत्रयव्यतीतस्य पुनर्जन्म न विद्यते ॥ ११ ॥

உடலுக்கு ஏற்படும் வேறுபாடுகளால் ஆத்மா பாதிக்கப்படுவதில்லை. உடல் அழிவுள்ளது, ஆத்மா நிலையானது என இனிக் கூறுகிறது. ஆத்மா, விழித்தல், கனவுள்ள தூக்கம், மற்றும் ஆழ்ந்த உறக்கம் எனும் மூன்று நிலைகளிலும் ஒன்றாகவே இருப்பதாக அறியவேண்டும். அதாவது ஒரே ஆத்மாவுக்கு இம்மூன்று நிலைகளும் உடலின் சேர்க்கையால், அதில் இருக்கும்போது, உண்டாகின்றன என்றபடி. இம்மூன்று நிலைகளைக் கடந்தவனுக்கு மறுபிறவி கிடையாது. அதாவது, கர்மாவினால் ஏற்பட்ட ஶரீரஸம்பந்தம் அடியோடு அற்றுப்போனால், ஆத்மாவுக்கு விழித்திருத்தல் முதலிய நிலைகளில்லை.

ஸூத்ரகாரரும் இம்மூன்று நிலைகளைப் பற்றிய உபநிஷத் வாக்யங்களை விளக்க, படுத்தவனே எழுந்திருக்கிறானா அல்லது வேறு பேர்வழியா என விசாரித்து, படுத்தவன் தான் எழுந்திருக்கிறான் என 'स एव तु कर्मानुस्मृतिशब्दविधिभ्यः' (ब्र.सू. 3.2.9) என்ற ஸூத்ரத்தில், கர்மா, அநுஸ்ம்ருதி, ஶப்தம், மற்றும் ஶாஸ்த்ர விதிகள் என்ற நான்கு காரணங்களால் தீர்மானித்திருக்கிறார். அதாவது, கர்மா - ஒரு உடல் வரக்காரணமான கர்மா முடியும் வரை ஆத்மா அவ்வுடலிலேயே இருக்கும். அநுஸ்ம்ருதி - தூங்குவதற்கு முன்னம், எழுந்த பின் செய்யவேண்டி நினைத்திருந்தவற்றை எழுந்த பின் செய்தல். இது

படுத்தவன் ஒருவன், எழுபவன் வேறொருவனாகில் கூடாது. ஶப்தம், அதாவது, ஶ்ருதி, 'त इह व्याघ्रो वा सिंहो वा वृको वा वराहो वा कीटो वा पतंगो वा दंशो वा मशको वा यद्यद्भवन्ति तदा भवन्ति' (சா.உ. 6.10.2) *புலியோ, சிங்கமோ, ஓநாயோ, பன்றியோ, புழுவோ, ஈயோ, பூச்சியோ, கொசுவோ எது படுத்தாலும் அதுவே எழுகிறது, எனக்கூறுவதால். மற்றும் ஶாஸ்த்ரங்களில் வெவ்வேறு பலன்களுக்காகக் கூறப்பட்டுள்ள விதிகள் - எந்த கர்மாவினால் எந்த உடல், அது எவ்வளவு காலம் தங்க வேண்டியது, உடலே மறுபடி வரக்கூடாதெனில் அதற்கு வழிமுறைகள் முதலியன.* 11.

एक एव हि भूतात्मा भूतेभूते व्यवस्थितः । एकधा बहुधा चैव दृश्यते जलचन्द्रवत् ॥ १२ ॥

ஜீவாத்மா பலவகைப்பட்ட உடல்களைக் கொள்ளும் போது பலவகைப்பட்ட ஆத்மாக்கள் இருப்பது போல் தோன்றினாலும், எல்லா ஆத்மாக்களும் ஒரே மாதிரியானவர்கள் தான். ஒரே சந்திரன் பல நீர்நிலைகளில் ஒன்றாகவும், பலவாகவும் வெவ்வேறு படிகளில் காண்பது போலாமிது.

ஒரே சந்த்ரனைப் போல், ஒரே ஜீவாத்மா, ஒரே ஸமயத்தில், வெவ்வேறு உடல்களில் பொதுவாக இருக்க மாட்டான். வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு உடல்களில் இருக்கலாம். அன்றிக்கே ஒரு ஜீவாத்மா தான் உள்ளான் என்றபடியன்று.

சந்த்ரனும் ஒருவன் தான் உண்மையில். பல இடங்களில் ப்ரதிபலிப்பதால் பலவாகத் தெரிகிறான். பல ப்ரஹ்மாண்டங்களில் பல சந்த்ரர்களும் உள்ளனர். ஏக என்கிற சொல் ஜீவஜாதியைக் குறிக்கிறது. இப்படிக் கொள்ளாவிடில், ஒரே இயல்புள்ள, ஜீவாத்மாக்களின் பன்மையைக் கூறும் பல ஶ்ருதிவாக்யங்கள் விரோதிக்கும். ஒரே பொருளுக்கு பற்பல உபாதிகளால், பலவான தோற்றம் என்பது, ஜீவாத்மாவுக்குக் கர்மா உபாதியாவதால் கூடும்.

அல்லது, பரமாத்மா எல்லா உடல்களிலும், உயிர்களிலும் ஒரே மாதிரி தான் இருக்கிறான் என அறியவேண்டும். ஏற்றத்தாழ்வு பார்ப்பதில்லை என்றபடி. அந்தர்யாமி நிலையில், அசேதனங்களிலும், ஜீவாத்மாக்களிலும் உட்புகுந்து, அவற்றால் அறியப்படாமல், அவற்றிலிருந்து வேறுபட்டவனாய், அவற்றை ஏவுதல் செய்கிறான். அன்றிக்கே, பரமாத்மாவுக்கு கர்மா முதலிய உபாதிகளும் இல்லை, அதனால் பலவகைத் தோற்றமும் இல்லை. ஐந்து நிலைகளும், அவதாரங்களுமோவெனில், தன் ஸங்கல்பத்தால், எப்பொழுதும், அவ்வப்போதும், பக்தர்களை அனுக்ரஹிக்கப் பல உருவங்களைக் கொள்கிறான். 'தாய் நினைந்த கன்றே ஒக்க என்னையும் தன்னையே நினைக்கச் செய்து, தானெனக்காய் நினைந்தருள் செய்யும் அப்பன்' (பெரியதிரு. 7.3.2) *என்றும், 'கறவா மடநாகு தன் கன்றுள்ளினாற்போல் மறவாதடியேன் உன்னையே அழைக்கின்றேன்' (பெரியதிரு.* 7.1.1) *என்றும் திருமங்கை ஆழ்வார், ஶ்ருதி* 'यथा धेनुर्वा वत्सं वत्सो वा मातरम्' *என்று கூறினதைத் தெரிவிக்கிறார்.* 12.

घटसंवृतमाकाशं नीयमाने घटे यथा । घटो नीयेत नाकाशं तथा जीवो नभोपमः ॥ १३ ॥

ஒரு பானையில் அடங்கிய ஆகாயம், அந்தப் பானையை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டு செல்லும்போது, தான் கொண்டு செல்லப்படவில்லை. அவ்வவ்விடத்திலுள்ள ஆகாயம் அப்பானையை நிரப்புகிறது. பானை மட்டும் நகர்கிறது. அவ்வாறே ஜீவாத்மாவும் ஆகாயத்தைப் போன்றவன்.

இங்கும் மேலோட்டமாக ஒரே ஜீவன் தான் இருப்பதாகவோ அல்லது ஜீவனையே பரமாத்மாவாகவோ கூறுவதாகத் தோன்றும். ஆனால், முன் மந்த்ரத்தைப் போன்றே இதிலும் ஜீவாத்மா கர்மாவினால் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு உடல்களைக் கொள்வதையே மற்றொரு எடுத்துக்காட்டால் கூறுகிறது.

விபுவாயிருப்பதால் ஆகாயத்தைப் போன்று ஜீவனும் விபுவோ என நினைக்காமைக்காக இது

தேவைப்படுகிறது. இதில், அணுவான ஜீவாத்மா 'उत्क्रान्तिगत्यागतीनाम्' (ब्र.सू. 2.3.4) உடலில் நுழைதல், அதிலிருந்து வெளியேறல், பல இடங்களுக்குப் போக்குவரத்து, கர்மாவினால் அவ்வுடல்களில் இன்ப, துன்பங்களை நுகர்தல் முதலிய செய்த போதிலும், ஸ்வரூபத்தில் அவன் அப்பழுக்கற்றவன் மற்றும் அந்தமில் பேரின்பத்துக்கு உரியவன் என அறிந்தால் தான் அதற்கு வேண்டிய ஸாதனத்தை ஏற்று, தன் தன்மையைப் பெறுவான் என விளக்குகிறது. இங்கு, பானைகள் பலவாயின் எந்த விரோதமும் இல்லை என்பதால், ஜீவாத்மாக்கள் பலராயிருப்பது முரணாகவில்லை. அன்றிக்கே, ப்ரஹ்மத்தைப் பற்றிச் சொல்ல வந்ததுமன்று. 13.

घटवद्विविधाकारं भिद्यमानं पुनःपुनः । तद्भग्नं न च जानाति स जानाति च नित्यशः ॥ १४ ॥

பானையைப் போன்று, வெவ்வேறு உருவங்களில் இருந்து, உடைந்தபோதில், அந்த பானை முதலியன தாம் உடைந்ததை அறிவதில்லை. ஆகாயமும், அவை உடைந்ததையோ, தான் உடைந்ததாகவோ, ஒன்றேயாக உள்ளதாகவோ அறிவதில்லை. ஆனால், அவனோ, அதாவது, ஜீவனோ, அதை எப்பொழுதும் அறிகிறான்.

இங்கும், ஜீவர்கள் உட்புகும் உடல்கள், தந்தம் காலம் முடிந்தவாறே விழுந்து விட, அவை தம் அழிவை அறிவதில்லை. எந்தெந்த ஜீவனின் கர்மாவினால் அவை ஏற்பட்டனவோ, அவனவன் அவற்றின் அழிவை அறிகிறான் எனப்படுகிறது.

இதனால், ஜீவாத்மாதோறும், ஒவ்வொரு உடலும், பல கர்மாக்களின் பலன்களை அநுபவிப்பதற்காக ஏற்படுகிறது. அந்தந்த அநுபவத்திற்குப் பிறகு, அந்தந்த கர்மா அழிந்து விடுவதால், அதனால் ஏற்பட்ட உடல் விழுந்து விடுகிறது. இது அவ்வோ ஆத்மாவுக்குத் தெரிந்து கொண்டிருக்கும். ஆதலால், மறுபிறவி வேண்டாதவன், அப்பிறவிக் கடலை தாண்டுவதற்கு வேண்டிய வழியை, விரைந்து தேடி, செயல்படுத்தி, பரிபூர்ண ப்ரஹ்மாநந்தத்தை அடைவதற்கு விழையவேண்டும் என்றபடி. 14.

शब्दमायावृतो नैव तमसा याति पुष्करे । भिन्ने तमसि चैकत्वमेक एवानुपश्यति ॥ १५ ॥

ஜீவாத்மாக்களில் ஏற்றத்தாழ்வு இல்லாததை அறிந்தால், எல்லோருக்கும் ஒருவனே புகல் என்பது விளங்கும். அறியாமையால், சொற்களின் வேறுபாட்டால் அலைக்கழிக்கப்பட்டு, ஒருமையை அல்லது தனித்தன்மையை அடைவதில்லை. அறியாமை கழிந்த போது, ஒருவனே, ஒருமையை நன்குக் காண்கிறான்.

இதில் பிறவிக்கடலைக் கடக்க வழியான எம்பெருமான் ஜீவாத்மாக்களில் சேர்ந்தவன் அல்ல எனக் கூறப்படுகிறது. 'அவரவர் தமதமதறிவறிவகைவகை அவரவரிறையவரென வடியடைவர்கள்' (திருவாய். 1.1.5) என்று ஆழ்வார் ஸாதித்தபடியே, பற்பல சொற்களால் வழங்கப்பட்ட விடுதலைக்கான காரணங்கள், தானாகவே பகுத்தறியப் புறப்பட்டு, கலங்கியபோது, பலவாகத் தெரிகின்றன. ஆசார்யகடாக்ஷத்தால் மயல் தீர்ந்து, 'सर्वस्य शरणं सुहृत्' (श्वे.उ. 3.17), 'वन्दे विष्णुं भवभयहरं सर्वलोकैकनाथम्' (वि. सहस्रनाम) என்கிறபடியே 'ஸ்ரீமானான நாராயணனே எல்லா ஜீவாத்மாக்களுக்கும் தஞ்சம்' எனத் தெளிவாகக் காண்கிறான். 15.

शब्दाक्षरं परं ब्रह्म तस्मिन्क्षीणे यदक्षरम् । तद्विद्वानक्षरं ध्यायेद्यदीच्छेच्छान्तिमात्मनः ॥ १६ ॥

'यद्वेदादौ स्वरः प्रोक्तो वेदान्ते च प्रतिष्ठितः । तस्य प्रकृतिलीनस्य यः परः स महेश्वरः ॥' (तै.उ. 2.10) என வேதங்களின் தொடக்கத்திலும் முடிவிலும் கூறப்படும் ப்ரணவம், ஶப்தாக்ஷரம் எனப்படுகிறது. அதை உபாஸித்துப் பிறகு, அதன் முடிவில், அதனால் சொல்லப்படும் அக்ஷரம் என்னப்படும் பரப்ரஹ்மத்தை த்யானிக்கவேண்டும். வித்வான், அதாவது, உபாஸகன், தனக்கு நிலையான அமைதியை விரும்பு-

வானாயின், இவ்வாறு முறையே த்யானித்து, ஆத்மஶாந்தியாகிய உயர்நிலையைப் பெறுகிறான். 16.

द्वे विद्ये वेदितव्ये तु शब्दब्रह्म परं च यत् । शब्दब्रह्मणि निष्णातः परं ब्रह्माधिगच्छति ॥ १७ ॥

ஶப்தப்ரஹ்மம் மற்றும் பரப்ரஹ்மம் என்ற இரண்டு வித்யைகள் கட்டாயம் அறியத்தக்கன. ஶப்தப்ரஹ்மம் அபரவித்யை எனப்பட்டது. அதில் நல்லதேர்ச்சியைப் பெற்றவன், பரப்ரஹ்மத்தை அறிந்து, அதனையே அடைகிறான். மோக்ஷத்தை அளிக்கும் பரவித்யை உபாஸனம் என்னப்படும்.

முன் மந்த்ரத்தில் கூறிய ப்ரணவ உபாஸனமும், பரப்ரஹ்மோபாஸனமும் இங்கு முண்டகோபநிஷத்தில் 'द्वे विद्ये वेदितव्ये इति ह स्म यद्ब्रह्मविदो वदन्ति परा चैवापरा च' (मु.उ. 1.4) *எனக் கூறியபடி, பரா, அபரா வித்யைகளெனத் தேறுகிறது.* 17.

ग्रन्थमभ्यस्य मेधावी ज्ञानविज्ञानतत्परः । पलालमिव धान्यार्थी त्यजेद् ग्रन्थमशेषतः ॥ १८ ॥

பற்பல ஶாஸ்த்ரங்களின் புத்தகங்களைக் கசடறக் கற்று, புற, உள் அறிவுடன் கூடிய, மேதாவியான உபாஸகன், உள்ளிருக்கும் தான்யத்தை வேண்டுபவன் மேற்தோலான உமியை விடுவதைப் போல், அந்த க்ரந்தங்களின் ஸாரமான உட்பொருளாகிய ப்ரஹ்மத்தை ஏற்று, பின்னர் க்ரந்தங்களை அடியோடு விட்டுவிடவேண்டும். 18.

गवामनेकवर्णानां क्षीरस्याप्येकवर्णता । क्षीरवत्पश्यते ज्ञानं लिङ्गिनस्तु गवां यथा ॥ १९ ॥

பஶுக்கள் பல நிறங்களிலிருந்தாலும், அவை கொடுக்கும் பால் ஒரே (வெண்மை) நிறமுடையதாய் இருப்பதைப் போல், அறிவு பாலைப் போன்றது. க்ரந்தங்கள் பஶுக்களைப் போன்றன. 'त्रय्यन्तैरेककण्ठैः तदनुगुणमनुव्यासमुख्योक्तिभिश्च श्रीमान्नारायणो नः पतिरखिलतनुः मुक्तिदो मुक्तभोग्यः' (श्रीमद्रहस्यत्रयसारे परदेवतापारमार्थ्याधिकारे) *என்கிறபடியே, அபரவித்யையான, பதினான்கு வித்யாஸ்தானங்களான, எல்லா வேத, வேதாங்க, உபாங்கங்களும், ஒரே குரலாக, ப்ரஹ்மத்தைப் பற்றி, ஹேய ப்ரத்யனீக, கல்யாண குணாகரமெனத் தெரிவிக்கின்றன. ஆக, ஒன்றுக்கொன்று முரணாக இருக்கும்படி ஶாஸ்த்ரங்களின் கருத்தை ஏற்கக் கூடாது.* 'सर्वोपनिषदो गावः' (भ.गी.ध्यानं 4) *என்றும், ப்ரஹ்மத்தின் உபயலிங்கத்தை, மற்றவைகளிலிருந்து வேறுபடுத்தும் தன்மையான அடையாளங்களைச், சொல்வதால் ஶாஸ்த்ரங்கள் 'லிங்கி' என்னப்படுகின்றன.* 19.

घृतमिव पयसि निगूढं भूतेभूते वसति विज्ञानम् । सततं मन्थयितव्यं मनसा मन्थानभूतेन ॥ २० ॥

'கறந்த பாலுள் நெய்யே போல் இவற்றுள் எங்கும் கண்டுகொள்' (திருவாய். 8.5.10), 'உடன்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே' (திருவாய். 1.1.7) என ஆழ்வாரும், 'तिलेषु तैलं दधनीव सर्पिः' (श्वे.उ. 1.15) *என்று மறைகளும் பறைசாற்றுகிறபடி, ஜ்ஞானஸ்வரூபமும், ஜ்ஞாநகுணமுமான பரப்ரஹ்மம், ஒவ்வொரு வஸ்துவுள்ளும் மறைந்து பரவி இருக்கிறது. அதன் இந்த அந்தர்யாமித் தன்மை எப்பொழுதும் மனதாகிற கடைகோலால் கடைந்து நுகரப் பட வேண்டும். உபநிஷத்துகள், த்யானிப்பவர்களுக்கு கொழுகொம்பாய், ஆவிக்கோர் பற்றுக்கொம்பாய், அருள்வதற்காக, ப்ரஹ்மம் எல்லோரின் இதயத்திலும் உட்புகுந்து குடிகொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றன.* 'यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम्' (मु.उ. 3.2.3) *என்று ஶ்ருதி, 'அவனால் வரிக்கப்பட்டவருக்கே அவன் தெரிவான்' என்றாலும், அதற்கு உதவுவதற்காக எல்லோரிலும் உட்புகுந்து உடன் நிற்கிறான் என்றபடி.* 20.

ज्ञाननेत्रं समादाय चोद्धरेद्वह्निवत्परम् । निष्कलं निश्चलं शान्तं तद्ब्रह्माहमिति स्मृतम् ॥ २१ ॥

அறிவென்னும் கடைகயிறைக் கைக்கொண்டு, பரம்பொருளான ப்ரஹ்மத்தை, அரணிக்கட்டையைக்

கடைந்து நெருப்பைப் போல், விக்கொணர வேண்டும். அந்த ப்ரஹ்மமானது, ப்ராணன் முதல் நாமம் வரையான பதினாறு பகுதிகளற்று, விபுவாதலால் எங்கும் நகராது அசைவற்று, எல்லாம் அதற்கு அடங்கியிருப்பதால் பதற்றமின்றி, அமைதியானதாக இருக்கிறதென்றும், அதுவே தன்னுள் எப்போதும் உறைவதால், த்யானிக்கும் தானாகவும் நினைவு கூரப்பட்டுள்ளது. 'அஹம் ப்ரஹ்ம' என்பதன் கருத்து ஏற்கனவே விவரித்துள்ளது. 21.

सर्वभूताधिवासं यद्भूतेषु च वसत्यपि । सर्वानुग्राहकत्वेन तदस्म्यहं वासुदेवः ॥ २२ ॥
तदस्म्यहं वासुदेव इत्युपनिषत् ॥

எல்லாப் பொருட்களுக்கும் எது உறைவிடமோ, மற்றும் எல்லாப் பொருட்களும் எதன் உறைவிடமோ, எல்லோருக்கும் அருள் புரிய எது இவ்வாறு உள்ளும் புறமும் கரந்துள்ளதோ, அந்த ப்ரஹ்மமாகிற வாஸுதேவனாக நான் இருக்கிறேன். இதில் த்யானத்தால் அடையப்படும் பரப்ரஹ்மம் திருமாமணிமண்டபத்தில் வீற்றிருக்கும் பரவாஸுதேவன் எனத் தெளிவாகக் கூறுகிறது. விஷ்ணு, நாராயண, வாஸுதேவ நாமங்களைக் கொண்ட மந்த்ரங்கள் பகவானின் வ்யாப்தியை காட்டுவதால் வ்யாபக மந்த்ரங்கள் எனப்படும். नारायणाय विद्महे वासुदेवाय धीमहि । तन्नो विष्णुः प्रचोदयात् (तै.उ. 2.1.6) என்கிறது தைத்திரீயம். ஆழ்வாரின் 'கடல்ஞாலம்' (திருவாய். 5.6) பதிகம் முதலியவற்றால் இது ஏற்படுவது முன்னமே விளக்கப் பட்டுள்ளது. இவ்வாறு உபநிஷத் முடிவு பெற்றது. 22.

इत्थं निर्वृत्तमाथर्वामृतबिन्दूपनीषदः । व्याख्यानं द्राविडीरूपं प्रीतयेऽस्तु रमाहरेः ॥

இவ்வாறு அம்ருதபிந்துபநிஷத்தின் சுருக்கமான கருத்து, தமிழில், 46ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மலருக்காக, சோகத்தூர் ராமாநுஜதாஸனால், எழுதி, ஸமர்ப்பிக்கப்பட்டது.